

# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## கல்லறையை 'தோட்டமாய் மாற்றி' மலர்ந்திட்ட இயேசு!

அழுது கொண்டிருக்கும் துன்பமான கல்லறை அருகில் "இயேசு எங்கே?" என்றே புலம்பினாள் மகதலேனா மரியாள்! அவளைப்போலவே, மானிடரின் துன்ப ஜீவியத்தில் "இயேசு எங்கே?" என்ற புலம்பலே இன்றும் தொனிக்கின்றது! என்ன ஆச்சரியம் "அவரை வைத்த அதே இடத்தில்" இயேசு உயிர்த்து மலர்ந்து நிற்பதைக் கண்டு உள்ளம் பூரித்தாள் மகதலேனா மரியாள்! வாழ்வின் சோக கல்லறையை, தோட்டமாய் மாற்றி.....

உயிர்த்து மலர்ந்த இயேசுவே போற்றி! *-tr*



## ஜெப ஜீவிய உன்னதமே, அவர்களின் பெலன்!

'இளைஞர்' இளைப்படைந்து சோர்ந்து போவார்கள்! என ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடுவதை வைத்துப்பார்த்தால், சோர்வில்லாத வாழ்விற்கு 'வயோதிபர்' என்றே நாம் கருதத் தோன்றும்! ஆனால், அவரோ அப்படிக்கூறாமல் **'கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள்'** ....சோர்ந்து போக மாட்டார்கள் என்றல்லவா குறிப்பிடுகிறார்! (ஏசாயா.40:30,31). இங்குதான் அவர் கூறவந்த இரகசியம் இருக்கிறது! ஆம்: சோதனையும், துன்பமும், பாடுகளும் நிறைந்த ஒவ்வொரு நாள் ஜீவியத்திலும், இவர்கள் கர்த்தருடைய சமூகம் சென்று அமர்ந்து, காத்திருந்து.... பாவம் கழுவப்பட்டு, பல்வேறு சூழ்நிலையின் நிமித்தமாய் அவரிடம் ஆறுதல் பெற்று "புதுபெலன்" அடைவார்கள்!

ஆகவே, இவர்களின் 'புதுபெலன்' இரகசியம் கேளுங்கள்: எத்துன்ப நேரத்திலும், நாள்தோறும் "கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்து" உயர எழும்பும் இவர்கள் யார்? தங்கள் ஜெப ஸ்தலத்தில் 'கர்த்தருக்கு காத்திருந்து' தங்கள் அன்றாட பெலனைப் பெற்று திரும்புகிறவர்கள்! இவர்களே, எத்துன்பத்தில் ஓடினாலும் இளைப்படையார்கள்! எந்த சூழ்நிலையில் நடந்தாலும் சோர்ந்து போகார்கள்! ஏன் தெரியுமா? "உன்னதமே, அவர்களின் பெலன்!" அல்லேலூயா.

*-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **செப்டம்பர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.

கடித தொடர்பு : **பரலோக பொக்கிஷங்கள்** 207A - Zaheer Hussain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## நம் யாவருக்கும் கர்த்தர் மாறாதவர்!

*மாற வேண்டியவர்கள் நாம் மாத்திரமே*

*எதுதான் இந்த உலகில் மாறாமல் நிலை நிற்கிறது? எல்லாமே மாறிப் போகும் இந்த உலகத்தில் 'சிலவைகள்' மாத்திரம் என்றென்றும் மாறுவதில்லை! அதை சத்திய வேதம் குறிப்பிட்டு "அசையாதவைகள் நிலைத்திருக்கும்! அசைவுள்ளவைகள் மாறிப்போகும்!" (எபி.12:27). தெய்வ நற்குணங்கள் மாறுவதில்லை! தேவனுடைய சர்வ ஆளுகை மாறுவதில்லை!* **தேவனுடைய அனுமதி இல்லாமல்** *'பொல்லாத சாத்தான்கூட' தீமை ஏதும் நமக்கு செய்திட, அவனால் முடியாது! அதுவும்கூட, அவ்வித தீமைகளை ஏன் அனுமதித்தார்? என்ற இரகசியத்தை, நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது அறிந்து வியப்படைவோம்! சர்வ ஆளுகை நிறைந்த அவர் "நான் கர்த்தர், நான் மாறாதவர்" என்றே வாக்குரைத்திருக்கிறார்! (மல்கியா 3:6). இதை யாக்கோபு மேன்மைப்படுத்தி கூறும்போது "அவரிடத்தில் யாதொரு மாறுதலுமில்லை! யாதொரு வேற்றுமையின் நிழல் கூட இல்லை!" என ஆணித்தரமாய் குறிப்பிட்டார் (யாக்கோபு 1:17).*

> **"கர்த்தர் மாறாதவர், என்ற சத்தியத்தை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டாமா? அவர் பரிசுத்தத்தில் மாறாதவர்! ஆகவே, நாம் பரிசுத்தராய் வாழும்படியும், நம் உத்தம ஜீவியத்தில் மாறாமல் நிலைத்திருக்கும்படியும், நம் எல்லோரையும் வற்புறுத்தி அழைக்கிறார்.**

*எனவேதான் "இருந்தவரும்! இருக்கிறவரும்! வருகிற வருமாகிய சர்வவல்ல கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று தூதர்கள் இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! (வெளி.4:8). கர்த்தர் தன் பரிசுத்தத்தில் மாறாதவராய் இருக்கிறபடியால், அவருடைய நியாயத்தீர்ப்பும், என்றென்றும் மாறாததாய் இருக்கிறது! நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசுவினிடத்தில் அநேகர் வந்து "கர்த்தாவே, கர்த்தாவே, உமது நாமத்தினால் பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினால் அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?"*

*என்று, கர்த்தருக்குச் செய்த ஊழியத்தை முன்வைத்து உரிமையுடன் கேட்டார்கள். நியாயத்தீர்ப்பின் நாளில் நிலைநிற்கும் மாறாத கர்த்தரோ "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரம செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்!" என இயேசு தனது மாறாத உண்மையை அறிவித்தார் (மத்.7:22,23).*

*இதற்கு ஒப்பாகவே "தேவன்* **நம்மில்** *என்றென்றும் மாறாதவர்". நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால், தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை எண்ணிப் பாருங்கள் என்று ரோமர்5:8 அறைகூவல் விடுவிக்கிறது. யோவான் தன் நிருபத்தில் வலியுறுத்தி கூறும்போது "***தேவன் அன்பாகவே இருக்கிறார்.** *அவருடைய அன்பில் எந்த மாறுதலுமில்லை" என எடுத்துரைத்தார்.*

> *நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைப் படிக்கிறீர்களே, கர்த்தருடைய அன்பின் சுபாவம் மாறாதது போலவே, தேவனுடைய வார்த்தையும் என்றென்றும் மாறுவதில்லை! என்னுடைய ஆதிநாட்களில், திறந்து வைத்த வேதத்தோடு கர்த்தரிடம் முறையிட்டு வேண்டினேன். "ஓ கர்த்தாவே, இந்த வேதத்தில் சில, பல காரியங்கள் எனக்கு விளங்கவில்லை. ஆகிலும், அவை அனைத்தையும் என் விசுவாசத்தில் ஏற்றுக்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை மாறாதவைகள், அழியாதவைகள்!" என விசுவாசத்தோடு உறுதிபட அறிக்கை செய்திருக்கிறேன். ஆகவே, இந்த வேதம் தேவனுடைய வார்த்தைகள்தான் என்பதில் ஒருதுளி அளவும் எனக்கு சந்தேகமில்லை. அதுவே, என் ஊழியத்தில் மிகுந்த தைரியத்தை எனக்கு வழங்கியிருக்கிறது! இந்த அதிகாரமும், தைரியமும் நான் எதினால் பெற்றேன்? சிலர் வேதத்தைப் பற்றி என்னிடம் சொல்லியதால் அல்ல அல்லது சில புத்தகங்களை வாசித்ததாலும் அல்ல!....*
>
> **"அது முற்றிலும், தேவன்மேல் நான் சாய்ந்து கொண்ட விசுவாசம். நீங்கள் எத்தனை சத்துவங்களைக் கொண்டு அசைத்தாலும், அந்த விசுவாசம் அசையாது, அசைந்து போவதுமில்லை!**

*மனுஷனும் மனுஷனுடைய சுபாவங்களும், அன்று முதல் இன்று வரை மாறாததாகவே இருக்கிறது. "எல்லாவற்றைப் பார்க்கிலும், இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?" என்று எரேமியா தீர்க்கதரிசி எத்தனை ஆணித்தரமாய் கூறினார் (எரே.17:9). மனுவர்க்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணும் ஜனங்கள், இவ்வித கற்பழிப்பு ஏன்? இவ்வித*

*வன்கொலைகள் ஏன்? கொடூர தற்கொலைகள் ஏன்? தீவிரவாத கொடுமைகள் ஏன்? என, நாள்தோறும் செய்திதாளின் செய்திகளை அறிந்து, மனம் வெதும்பி கேட்கிறார்கள்? அன்றுமுதல் இன்றுவரை மனுஷனுடைய இருதயம் அதேபோல்தான் இருக்கிறது. மனுஷன் எப்போதுமே தேவனுக்கு விரோதமான காரியங்களே செய்கிறான்! அது ஏன்? அவனுக்குள் குடிகொண்டிருக்கும் ஓர் நோய் உள்ளது. அந்த நோயின் பெயர் பாவம். இந்த பாவமே, நம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது!*

*இத்தனை தாறுமாறான சந்ததிக்குள்தான், தேவ ஊழியனாகிய நான் பிரவேசித்து "தெய்வ அன்பை" பாவத்தை மாற்றும், மாமருந்தாக அறிவித்து வருகிறேன்! ஒருசமயம் ஆதிவாசிகள் நடுவில் அமர்ந்து ஊழியம் செய்தபோது யோவான் 3:16-ம் வசனத்தை முன்வைத்து மிக எளிய முறையில் சிறந்த உதாரணங்களோடு விவரித்தேன். முடிவாக, அந்த ஜெப நேரத்தில், எல்லா ஆதிவாசிகளும், தெய்வ அன்பினால் மனமுடைந்து இரட்சிக்கப்பட்டார்கள்! அதற்கு அடுத்த நாள் ஞாயிற்றுகிழமையில், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் உள்ள புனித மேரி தேவாலயத்தில் பிரசங்கித்தேன். அப்போது "கர்த்தாவே, நான் மலை ஜாதி மக்களோடு பிரசங்கித்த அதே யோவான் 3:16-ம் வசனத்தையே எளிய முறையில் பிரசங்கிக்க போகிறேன்" என கூறி, பிரசங்கித்து முடித்தவுடன் ஏராளமான உயர்கல்வி மாணவர்கள்* **தெய்வ அன்பின் அந்த எளிய செய்தியைக் கேட்டு** *மனந்திரும்பி, கிறிஸ்துவை இரட்சகரும் ஆண்டவருமாய் ஏற்றுக்கொண்டார்கள்.*

> **"பாருங்கள், மலை ஜாதியனரோ அல்லது கல்வி கற்றவர்களோ, எல்லோருடைய இருதயமும் ஒரே நிலையில் மாறாததாகவே இருக்கின்றன! உண்மைதான் "உங்களுக்குள் பாவம் இருக்கிறது, அதை நீங்கள் மனந்திரும்பி, அறிக்கை செய்திட வேண்டும்!".**

*உங்கள் பாவங்களை மன்னித்து, கர்த்தர் உங்களை இரட்சிக்கும்படி, இயேசு கிறிஸ்துவை இரட்சகரும் ஆண்டவருமாய் இப்போதே ஏற்றுக்கொள்ளுங்கள்! அநேகம் சமயங்களில்,* **தேவன் தன்னுடைய விரல் நீட்டி,** *உங்கள் பாவத்தை தொட்டு, நான் உனது இரட்சகராய் இருக்க வேண்டுமென்றால் "***இந்த குறிப்பிட்ட பாவங்களை அறிக்கை செய்துவிட்டுவிடு***" என கூறுவார். ஆம், கர்த்தர் மாறாதவர்! தம்முடைய அன்பில் மாறாதவராய், உங்களோடு எப்போதும் வாசம் செய்திடவே அவர் விரும்புகிறார்! ஆமென்.*

*- பண்டிதர் பில்லி கிரஹாம் USA*

## பிறரின் 'அந்தரங்கத்தை' நியாயம் தீர்ப்பது தவறல்லவா?

*மறைவானதை நியாயம் தீர்ப்பது, பெருமை*

தேவனுடைய வீடாயிருக்கும் அவரது சபையில், கீழ்கண்ட வசனத்தின் சூத்திரத்தை கைக்கொண்டு வாழ மறவாதிருக்க வேண்டும்: "**மறைவானவைகள்** நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்! **வெளிப்படுத்தப்பட்டவைகளோ....** நமக்கு உரியவைகள்" (உபா.29:29). இந்த வசனம் தன்னை தாழ்த்த விரும்பும் ஒவ்வொரு கர்த்தருடைய ஊழியருக்கும் அல்லாமல், நம் அனைவருக்குமே உரியதாகும். ஸ்தல சபைக்குள் 'வெளியரங்கமான' தொந்தரவு செய்யும் பொல்லாத குணமுள்ளவர்களை, சபையின் கண்காணியாயிருக்கும் ஊழியர் விசாரித்து, நியாயந்தீர்த்து, கர்த்தருடைய அனுமதியில் அந்த பொல்லாத நபரை சபையிலிருந்து விலக்கி வைப்பதற்குகூட வேதத்தில் வழிமுறை தரப்பட்டுள்ளது.

> "
> **ஆனால் எது பொல்லாதவைகளாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்? 'எவைகளெல்லாம் வெளியரங்கமாக காணப்படுகிறதோ' அவைகளே நியாயந்தீர்க்கப்பட வேண்டும். அல்லாமல், நாமாக யூகித்துக் கொள்ளுகிற பொல்லாதவைகள் அல்ல!**

வெளியரங்கமாக்கப்பட்டதும், கிட்டதட்ட சபையிலுள்ள எல்லோருடைய கண்களுக்கும் தெளிவாய் தோன்றப்பட்டவைகள் நியாயந்தீர்க்கப்படும்போது, எல்லா ஜனங்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள்! அவர்களும், பயபக்தியுடன் சபையில் செழித்து வளருவார்கள்!

எதுவும் வெளியரங்கமாயில்லாமல், என் மனதிற்கு தோன்றியதைக் கொண்டு என் சகோதரனை நான் நியாயந்தீர்த்தால், "**பொறாமையின் விதை**" விழுவதற்கு என் இருதயத்தை சாத்தானுக்கு கொடுத்தவனாவேன்! இதன் விளைவு கொடியது:

> "
> **பிழை காணப்படாத அந்த உத்தம சகோதரனை நான் நியாயந்தீர்த்து விலகுவது மாத்திரமல்லாமல்..... இன்னும் அதிகமான கறைபடும் பாவங்களுக்கு நேராய் என் இருதயம் வேர்கொண்டு தாவி பிடித்துவிடும். இங்குதான், நாம் யாவரும் மிகுந்த எச்சரிக்கை கொண்டிருக்க வேண்டும்!**

உங்களுக்கும், உங்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் சுகம் கொண்டுவர ஒரே ஒரு வழிதான் உண்டு. நீங்களாக உள்ளத்தில் வைத்துக் கொண்ட, பிறரைக் குறித்த அபிப்பிராயங்களையும்,

*எண்ணங்களையும் தூர எறிந்து, உங்களை மாத்திரமே நியாயம் தீர்த்துக் கொள்வது தவிர வேறு வழியில்லை.....!*

*ஒருவருக்கொருவர் ஐக்கியம் என்பது, ஒரு இங்க் பேனாவைக் கொண்டு ஒரு பதிவேட்டில் பெயர்களை எழுதிவைப்பது போன்றது அல்ல! மெய்யான ஐக்கியம் "ஒவ்வொரு மனந்திரும்பிய விசுவாசியின் உத்தம ஜீவிய அடிப்படையில்" கட்டப்பட்டு உருவாகுவதேயாகும். ஆம், இவ்வித உத்தம ஜீவியம் உடையவர்களைக் கொண்டு மாத்திரமே தேவன் ஐக்கியத்தைக் கட்டுகிறார். இவ்வித தரம் நிறைந்த* **உத்தம ஐக்கியமே** *பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தேவன் அக்கறை கொண்டிருக்கிறார்.*

*காரியத்தின் முடிவாக "எனக்கு மறைவாக வெளிப்படுத்தப் பட்டவைகள், அந்தரங்க மறைவிலே நியாயந்தீர்க்கப்பட வேண்டும்.....* **ஒன்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடி நடந்தால்** *அவைகள், எல்லோருக்கும் முன்பாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்" (1தீமோ.5:20). மாம்சத்திற்குரிய கிறிஸ்தவன் இந்த எளிய! இணக்கமான! நேர்மையான! பிரமாணத்தை புரிந்து கொள்ள மாட்டான்! அதுஏனெனில், இந்த பிரமாணங்கள் அவனுடைய இருதயத்தில் பலன்தர இடம் பெற்றதில்லை. ஒரு ஆவிக்குரிய மனுஷன் இந்த இணக்கம் நிறைந்த பிரமாணத்தை நேசிப்பான், அதன்படி நடப்பான்!!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## கர்த்தருக்கு 'எதையும் கொடுத்திட விரும்பும்' இதயம் வேண்டும்!

*'இழப்பிலும்' மகிழ்ச்சி இழக்கலாகாது*

**எ**ன் முழுமையும், ஊழிய அர்ப்பணத்திற்கு கொடுத்த பிறகு எனக்கென்று பூட்டி வைக்கும் ஒரு பணப்பெட்டியோ அல்லது ஒரு சிறிய மணிபர்ஸ் கூட வைத்துக்கொள்ளவில்லை! என் அரண்மனை வீட்டிலிருந்து, மாற்று உடைகள் வெகு சில மாத்திரமே கொண்டு வந்திருந்தேன்.

***இ****தையெல்லாம் நான் எழுதுவதற்கு காரணம், என்னை பொய்யாய் குற்றம் சாட்டி துன்புறுத்திய சிலர், அரண்மனை வாசத்தில் தொடர்ந்து என்னை வன்கண்ணோடு பகைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் ஏற்கெனவே 'ஒரு பெருந்தொகையை' அரண்மனை வீட்டிலிருந்து நான் எடுத்துச் சென்று ஆடம்பரமாய் செலவழிப்பதாகவும், தந்தை லா-கோம்பேக்கும் அவருடைய நண்பர்களுக்கும் இஷ்டத்திற்கு பணம்*

*வாரி இரைத்ததாகவும் குற்றம் சாட்டி பரப்பியிருந்தார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி என் கையில் பணமில்லாதிருக்கும் போது, இப்படியெல்லாம் தவறாய் என்னை குற்றம் சாட்டி, என்னுடைய நற்பண்பின் மீது களங்கம் கற்பிக்க முயற்சித்தார்கள். விந்தை என்னவென்றால், இவ்வித விரோத செயலின் மத்தியில், என் இருதயத்தில் 'தெய்வ அன்பு' வளர்ந்ததைக் கண்டேன்!*

எனக்கு நிகழ்ந்த நடைமுறை ஜீவியம் என்னவென்றால் 'அனசி' (Annecy) சிறு பட்டணத்திற்கு நான் வந்தபோது, என் அரண்மனை ஆடையை பார்த்தவுடன், ஒரு ஏழை மனிதன் யாசகம் கேட்டார். என்னிடத்தில் பணம் வைத்திராதபடியால், நான் உடுத்தியிருந்த உடுப்பிலுள்ள விலை உயர்ந்த ஓர் பட்டனை அவிழ்த்து அவருக்கு கொடுத்துவிட்டேன்! மற்றொரு முறை, ஒரு ஏழை மனிதன் என்னிடம் யாசகம் கேட்டபோது, என் கணவர் மரித்த பிறகு, இயேசு கிறிஸ்துவை என் மணவாளனாய் நிச்சயித்து அணிந்திருந்த தங்க மோதிரத்தை கழற்றி, அவருக்கு கொடுத்து விட்டேன்! என்பதுதான்.

இத்தனை துயரத்தின் மத்தியிலும், என் உள்ளத்தில் அமர்ந்து வாசம் செய்த மிகப்பெரிய சந்தோஷம் என்னவென்றால் "**என்னை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புவித்து விட்டேன்!**" என்ற எனது காணிக்கையேயாகும். இதுபோக, என்னிடத்தில் இராஜ்ஜியங்களும், பேரரசுகளும் இருந்திருக்குமென்றால், அவைகளையும் நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் என் கர்த்தாவிற்கு கொடுத்திருப்பேன்! இவ்வாறு, என் அன்பை தேவனுக்கு காட்டுவதற்கு, கொடுக்க வேண்டிய அனைத்தையும் கொடுத்து விடுவதற்கே என் உள்ளம் வாஞ்சித்தது!

- மேடம் குயான்

---

## உத்தமனை வாலாக்காமல், தலையாக்க விரும்பும் இயேசு!

*இயேசுவின் படை ஊழியம் மேன்மையானது*

அமெரிக்கா தேசத்தில், பல வருடங்களுக்கு முன்பாக நடைபெற்ற மிகப்பெரிய உள்நாட்டு போரை தலைமை தாங்கி நடத்திய உயர் ராணுவ அதிகாரி, ஜெனரல் வில்லியம் டிகம்ஸ் ஷெர்மன் ஆவார். அமெரிக்காவின் உள்நாட்டுப் போரை அடக்குவதற்கு மிகப்பெரிய திட்டத்தை வகுத்து செயல்பட்டார். அதன் விளைவாய், அந்தப் போரில், மாபெரும் வெற்றியை அடைந்தார்! அந்த வெற்றியை கொண்டாடுவதற்கு, மிகப்பெரிய அளவில் **வாஷிங்டன் பட்டணத்தில் 'வெற்றி அணிவகுப்பை'** நடத்துவதற்கு திட்டம் வகுத்தார். மிக நீண்ட அந்த அணிவகுப்பு, பெனிசில்வேனியா அகண்ட சாலை தொடங்கி,

*வெள்ளை மாளிகை வழியாய் செல்லும்படி அந்த அணிவகுப்பை ஏற்பாடு செய்திருந்தார். அந்த நீண்ட அணிவகுப்பின் நெறிமுறை ஒழுங்கின்படி, வெற்றி பெற்ற தமது வீரர்களின் பிரிவுகள் A,B,C,D,E,F என பிரிக்கப்பட்டு இருந்தன.*

*இச்சமயத்தில், அணிவகுப்பு தொடங்க வேண்டிய பெனிசில்வேனியா சாலையில் நிகழ்ந்த ஒரு பெரிய மாற்றம், சலசலப்பை ஏற்படுத்தியது. தலைமை ஜெனரல் ஷெர்மன் குதிரையில் வேகமாக வந்து, ஜெனரல் ஆலிவர் ஹாவர்டு பிரிவிற்கு முன்பாக வந்து நின்றார். ஜெனரல் ஆலிவர் ஹாவர்டு* **டென்சி மற்றும் அட்லாண்டா நகர பகுதிகளுக்கு** *தன் படைகளுடன் சென்று, வெற்றி கண்டவர். தலைமை ஜெனரல், அவருக்கு, பல்வேறு வெற்றிகளில் உயர் பதவி கொடுத்தவர். ஜெனரல் ஹாவர்டுக்கு கிடைத்த மற்றொரு மாபெரும் வெற்றி, தலைமை ஜெனரல் ஷெர்மன் அவர்கள் நடத்திய “சமுத்திரம் நோக்கி சென்ற படை” என்ற வீரமான போராகும். இத்தனை புகழ்பெற்ற ஆலிவர் ஹாவர்டு அவர்களின் பிரிவுக்கு முன்வந்த தலைமை ஜெனரல் ஷெர்மன், குதிரையிலிருந்து கீழே இறங்கினார். பின்பு ஜெனரல் ஹாவர்டை அழைத்துப் பேசினார்!*

*“**ம**திப்பிற்குரிய ஜெனரல் ஹாவர்டு, உங்கள் படை பிரிவின் தலைமையில் வெற்றி அணிவகுப்பை நீங்கள் முன்நின்று நடத்துவதற்கு நியமிக்கப்பட்டீர்கள்” என்று கேட்டார்.*

*அதற்கு ஜெனரல் ஹாவர்டு “நீங்கள் சொல்கிறது சரிதான் ஜெனரல்” என ராணுவ பணிவுடன் கூறினார்.*

*“ஜெனரல் ஹாவர்டு, நான் உங்கள் முன்பாக ஒரு வேண்டுகோள் வைத்திட விரும்புகிறேன்” என சொல்லுவதற்கு ஆரம்பித்தார். “நீங்கள் சொல்கிறபடி செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்” என்றார் ஜெனரல் ஹாவர்டு.*

*அதற்கு, ஜெனரல் ஷெர்மன் “முன்பு நடந்த போரில் வெற்றி பெற்ற ஜெனரல் ஆப்ஸ், உங்கள் படை பிரிவின் தலைமையில் நின்றிட பிரியப்படுகிறார். போரின் வெற்றி உங்களைச் சார்ந்ததுதான்! ஆனால், இந்த வெற்றி அணிவகுப்பில் அவர் உங்கள் ஸ்தானத்தை கேட்கிறபடியால், நீங்கள் தயவாய் உங்கள் பிரிவிற்கு தலைமை தாங்கும் அணிவகுப்பை, அவருக்கு கொடுத்து விலகிட முடியுமா? இது உங்களுக்கு பெரிய ஏமாற்றம் போல் தோன்றலாம். ஆனால்,* **நீங்கள் ஒரு உத்தம கிறிஸ்தவர்** *என்று நான் அறிவேன். ஆகவே ‘இந்த ஏமாற்றத்தை’ நீங்கள் அன்புடன் சகித்துக்கொள்வீர்கள் என*

*நான் உறுதியாக அறிந்திருக்கிறேன். தயவுடன், நீங்கள் சம்பாதித்த வெற்றியின் கனத்தை, ஜெனரல் ஆப்ஸ் அவர்களுக்கு கொடுத்து வெளியே வாருங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன்" என்ற கட்டளையை, அன்போடும் பரிவோடும் கூறினார்.*

**இ**தைக்கேட்ட ஜெனரல் *ஹாவர்டு*, சில வினாடி அதிர்ச்சியில் உறைந்து போனார். தன் படை பிரிவிலிருந்த துருப்பு வீரர்கள் எவ்வளவு உத்தமமாய் தியாகத்தோடு தேசத்திற்காய் பணிபுரிந்தார்கள் என்பதை ஜெனரல் *ஹாவர்டு* அறிவார். தான் முன்நின்று நடத்தும் அணிவகுப்பு தலைமை, **தன் படைக்குத் தரும் நன்றியின் பிரதிபலிப்பாய்** இருக்கும் என எண்ணங்கொண்டிருந்தார் ஜெனரல் *ஹாவர்டு!* தன் பிரிவின் படை வீரர்கள் ஒவ்வொருவரையும் நன்கு விசாரித்து நடத்தியிருந்தார்! தன் படை பிரிவின் வீரர்கள், ஒருவருக்காக ஒருவர் உயிரை கொடுப்பதற்கும் ஆயத்தமாய் இருந்த தீரர்கள்!

**"**

**காரியம் என்னவென்றால், போரின் உச்சக்கட்டத்தில் தன் இடதுகையை ஜெனரல் ஹாவர்டு இழந்திருந்தார். இத்தனை கனம் பொருந்திய அணிவகுப்பில் 'திடீரென்று' அந்த களத்திலிருந்து விலகி, வேறொரு ஜெனரலுக்கு கொடுப்பது ஒரு நீதியற்ற வேண்டுகோளாய் ஜெனரல் ஹாவர்டுக்கு மனதில் பட்டது!**

"யோசிக்கிறீர்களா ஜெனரல் *ஹாவர்டு!*" என தலைமை ஜெனரல் *ஷெர்மன்* கூறியவுடன், ராணுவ பாணியில் நேராக நின்ற ஜெனரல் *ஹாவர்டு* தலைவணங்கி "*நீங்கள் கொடுத்த கட்டளையை ஏற்றுக்கொண்டு! தாங்கள் என்னைப் பார்த்து* "**நீ ஓர் உத்தம கிறிஸ்தவன்**" *என அன்பாய் அழைத்ததற்கு முழு மதிப்பு தருகிறேன். என்னுடைய படைப்பிரிவிற்கு ஜெனரல் ஆப்ஸ் முன்நின்று*, இந்த வெற்றி பவனி *நடத்துவாராக*" என பணிவுடன் கூறினார்.

*அதற்கு*, தலைமை *ஜெனரல் ஷெர்மன்* மிகுந்த மகிழ்ச்சியோடு, "*ஜெனரல் ஹாவர்டு*, *உங்களுடைய பணிவும் உத்தமமும் எனக்குத் தெரியும்.* **இப்போது**, இந்த *மிகப்பெரிய மொத்தமான ராணுவ பிரிவுகளுக்கும், தலைமை பொறுப்பில் நான் முன் நின்று நடத்தும்,* **எனக்கு இணையான ஸ்தானத்தில்** *நீங்கள் வந்து* சேர்ந்து *கொள்ள தயவாய்* வேண்டுகிறேன்!" *என கூறினார்.*

**"**

**தலைமை ஜெனரல் ஷெர்மன், போரில் தன்னை தியாகமாய் தந்து, ஒரு கையை இழந்த ஜெனரல் ஹாவர்டை முன் நிறுத்தி நடத்திய அந்த ராணுவ வெற்றி அணிவகுப்பு, பொது ஜனங்கள் மத்தியில் பெரிய ஆரவாரத்தை உண்டு பண்ணியது மாத்திரமல்லாமல், எல்லோருடைய**

**கண்களிலும் நன்றியின் கண்ணீர், பனித்துளிபோல் உருண்டு விழுந்தன!**

*ஜெனரல் ஹாவர்டின் அபூர்வமான தாழ்மை குணம், கிறிஸ்துவின் மனதை பிரதிபலிப்பாய் அமைந்தது. ஆகிலும் தலைமை ஜெனரல் ஷெர்மன், ஜெனரல் ஹாவர்டை* **பின்னால் தள்ளுவதற்கு அல்ல, அவரை முன்னால் நிறுத்துவதற்கே மகிழ்ச்சிக் கொண்டிருந்தார்!** *ஓர் பண்புள்ள தலைமை ஜெனரல் 'பிறரை முன்னால் நிறுத்துவதற்கு' ஆசைப்படுவாரே அல்லாமல், அவர்களைப் பின்னால் தள்ளி ஒழிந்துபோகச் செய்யமாட்டார்! நம் இரட்சிப்பின் அதிபதி ஆண்டவர் இயேசு, அவரைப்போன்ற சமமான ஸ்தானத்திற்கு கொண்டு வருவதற்கே, தன்னுடைய உத்தம போர்ச்சேவகர்களுக்காய் பாடுபடுகிறார். இயேசுவின் அணிவகுப்பு படைகளுக்கு கீழ் நாம் இருப்பது எத்தனை பாதுகாப்பு! புனிதமான தாழ்மை கொண்ட தனது உத்தம சீஷர்களை* **வாலாக்காமல், தலையாக்குவார்!** *இந்த உயரிய கிறிஸ்துவின் நற்குணம் நம் கிறிஸ்தவ ஊழியங்களில் பரிமளித்திட கர்த்தர் உதவி செய்வாராக! ஆமென்.*

*- வில்லியம் மேக்டோனால்டு*

---

## மறக்கடிக்கப்படும் 'ஆதி சிலுவையே' நமக்கு வேண்டும்!

*'சொந்த ஜீவன்' பிழைத்திருப்பது அபாயம்*

அன்று 'ஆதிமுதல் சுமந்து வந்த' ஆசீர்வதிக்கப்பட்ட சிலுவை ஜீவியத்தை, தேவ ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து வரும் காலம் இது! அதை யாரும், விழிப்புடன் இன்று கண்டுபிடிக்கவும் இல்லை!

ஆதி பழமையான சிலுவைக்கோ 'உலகத்தோடு' யாதொரு தொடர்பும் இருந்ததில்லை! ஆதி சிலுவை, ஆதாமின் பெருமையான மாம்சத்தின் முன்னேற்ற நடையை தடை செய்து நிறுத்தியது! ஆனால், சிலுவை வழி மறந்த ஊற்றுக்கண்ணோ, 'தனக்குப் பிடித்த நன்மைகளை' செய்திட திரண்ட சமுத்திரமாய் பெருகியிருக்கிறது! அந்த பரந்த சமுத்திரத்தில் 'வீழ்ச்சியுற்ற ஆதாம்' தடையேதுமின்றி தாராளமாய் உலாவி வருகின்றான். இவ்வாறு, ஜீவியம் மாறாமலே, தன் சுயத்தின் மகிழ்ச்சியோடு, செழிப்புடன் வாழ்ந்து வருகின்றான்! ஏனெனில், சிலுவை மறந்த ஜீவியம், பாவ வழியை அடைத்துப் போடுவதற்குப் பதிலாய், அவனை, அவன் விருப்பத்தின்படியான திசைக்கு நயமுடன் திருப்பிவிடுகிறது!

*ஆதி முதலாய் சுமந்து வந்த சிலுவையோ, மரணத்தின் சின்னமாய் விளங்குகிறது! ஆம், தேவன் வழங்கும் பூரண இரட்சிப்பு, தனித்தனியாக ஒருவனிடம் கிரியைச் செய்து.... அவனை உருக்குலைத்து, பின்பு ஓர் புதிதான தெய்வீக வாழ்க்கைக்குள் அவனை உயிர்த்தெழச் செய்கிறது!*

*ஆனால், இன்றைய 'ஆதி சிலுவை மறந்த' விசுவாசிகளோ, "இயேசுவே எல்லாமுமாய் இருந்து, அவரே மரணமடைகிறார்!". இனி அடுத்து, இந்த விசுவாசிகள்* **"இயேசு மரித்ததைப் பற்றிய" அடுத்த பிரசங்கத்திற்காகவே காத்திருக்கின்றனர்!** *இவர்கள் கூறுவதெல்லாம் "நாங்களும் முற்றிலுமாய் இரட்சிக்கப்பட விரும்புகிறோம்" ..... ஆனால், சிலுவை சுமந்து மரிப்பதென்பது, கிறிஸ்துவோடு முடிந்து விட்டது, என தங்கள் இருதயத்தை பூட்டிக்கொள்கிறார்கள். ஆதி சிலுவை மறந்த இவர்கள், எங்கள் சுய - பீடத்தை நாங்கள் மாற்ற மாட்டோம்!* **எங்களுக்கு மரணம்** *என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை! என தங்கள் செயலில் வெளிப்படுத்தி, தங்கள் சொந்த ஆவிக்குரிய மரணத்தைக் குறித்து கவலைகொள்ளாமல்.... இவ்வுலகில், ஓர் சுக ஜீவிய கிறிஸ்தவத்தையே அணைத்துக் கொள்கிறார்கள்!*

> **" 'அன்று பிரசங்கித்த சிலுவை' போர்வையில், இவர்களுக்குள் ஒளிந்திருக்கும் "சுயத்தை" ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சுயத்தை தங்களோடு வைத்துக்கொள்ள விரும்பும் இவர்கள், தங்களை ஆவிக்குரிய நல்லவர்களாக காட்டிக்கொள்ளவே துடிக்கிறார்கள். தாங்கள் சுயமாய் விரும்பும் ஒன்றுக்காக, தங்கள் ஆவிக்குரிய நிலையை இழப்பதற்குகூடத் தயாராக இருக்கிறார்கள்.... ஆகிலும், தங்கள் சுயம் ஒழித்திட மறுக்கிறார்கள்!**

மேலும், கிறிஸ்துவை உயர்த்துவது போல் 'மாறுவேடம் பூண்டு' *தங்கள் சுயத்தையே உயர்த்துகிறார்கள்! சுயம் கண்டிக்கப்படாமலே,* தேவாலய சமூகத்திலும் துணிகரமாய் நிற்கிறார்கள்! இவர்கள், ஒரு குடிகாரன் கொட்டகையில் இருக்க விரும்புவதைவிட "வேதாகம *கான்பரன்ஸ்" கூட்டங்களில் முதன்மையாய் இருப்பதை "தங்கள் சுயத்திற்கு" சுகமாய் எண்ணி விரும்புகிறார்கள்!*

*சுயம் எப்படியெல்லாம், கொடிதாய் செயலாற்றுகிறது! அது தேவனுடைய முகத்தை நம்மிடமிருந்து மறைக்கும் ஓர் கொடிய திரை! வெறும் பிரசங்கத்தினால் அல்ல,* **வல்லமையான ஆவிக்குரிய அனுபவத்தினால் மாத்திரமே இந்த திரை விலகிட முடியும்!** *திரை ஒழிந்திட, தேவன் கிரியை செய்திட வேண்டும்! அந்த மரண கிரியை செய்து முடித்திட "சிலுவையை நம்மில்" வரவேற்றிட*

*வேண்டும்! 'முகதாட்சண்யம் இல்லாமல்' நம் சுயத்தை சிலுவையின் நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுத்திட வேண்டும்!*

*இவ்வாறெல்லாம் செயல்படுத்தாமல், உங்கள் மாம்சமும், சுயமும் சிலுவையில் அறையப்படாதிருந்தால்.... முதலாவது களவாடப்படுவது "**உங்கள் இருதயத்தின் பரிசுத்தம்**" என்பதை மறவாதிருங்கள்! பின்பு கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான குணாதிசயம் ஒழியும்.... ஆவிக்குரிய வெளிப்பாடு அழியும்.... கனியுள்ள வாழ்க்கை சிதறும்.... முடிவில், "உலகத்திற்கு ஒளியாய் உங்களை பிரகாசிக்கவைக்கும்" தேவனின் முகம் மறையும்!....*

> **"இந்த கேடான நிலையில், உங்கள் ஸ்தலங்களில் சபைகள் உருவானால், மனுஷீக - மாம்சத்திற்குரிய சபைகளே தோற்றுவிக்கப்படும்! இவ்வித சபைகளில் "கிறிஸ்துவோடு ஏற்றுக்கொள்ளும் மரணத்தை தவிர" மற்ற அனைத்தும் "மனுஷீக" நல்ல குணாதிசயத்திற்காகவே பிரசங்கிக்கப்படும்!**

*ஒருமுறை, சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை மங்காமல், பிரசங்கிக்கும் ஒரு முதிர்ச்சியடைந்த பரிசுத்தவானிடம் "போதகர் அவர்களே, சிலுவையில் அறையப்படுவதின் அர்த்தம் என்ன?" என ஒரு வாலிபன் கேட்டான். ஒரு கணம் சிந்தித்த அந்த வயதான பரிசுத்தவான், "சிலுவையில் அறையப்படுவதற்கு மூன்று பகுதிகள் வேண்டும்."* **முதலாவது,** *சிலுவையில் அறையப்படுகிறவன், அந்த ஒரே திசையை மாத்திரமே அவனது முகம் நோக்கிப் பார்க்க வேண்டும்! எனக் கூறினார். உண்மைத்தான், அவனைப் பின்னிட்டு அழைக்கும் யாதொரு சத்தத்திற்கும் அவன் செவிகொடுத்திட மாட்டான். இவன் எதிர்கொண்ட திசையில்தான் தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நிற்கிறார்கள்! அதோடு சேர்த்து, இவனது பரிசுத்தமாகுதலும், ஆவியில் நிறைந்த வாழ்க்கையும், சபையின் பக்தி விருத்தியும், இந்த திசையில்தான் இருக்கிறது!*

*பின்பு அந்த வயோதிப பரிசுத்தவான் "***இரண்டாவது** *பகுதி, சிலுவையில் அறையுண்டு வாழ விரும்பும் மனுஷன், அதை விட்டு விட்டு போய்விடக் கூடாது!" எனக் கூறினார். உண்மைதான், சொந்த ஜீவனை இழந்திடும் மரணத்திற்காக சிலுவையில் ஏறிவிட்ட மனுஷன், தனக்குப் பின்னால் இருக்கும் அனைவருக்கும் 'மறுப்பு' சொல்லித்தான் தீர வேண்டும். மெய்யாகவே 'இவ்வாறு' தன் குரு முன் வைத்த சிலுவையை ஏற்றுக் கொண்டவன் "எல்லாம் முடிந்தது" என்ற நிலைக்கு வந்து விடுவான்! அதாவது, இந்த முழு உலகத்திற்கும் தன்*

*முதுகையே காட்டி நிற்பான்! இவன் மாத்திரமே உண்மையான சீஷத்துவத்தின் கிறிஸ்தவன்!*

*அந்த வயதான பரிசுத்தவான், அந்த வாலிபனை நோக்கி "நான் கூறும்* **மூன்றாவது** *பகுதியை கேட்டுக்கொள்: நீ சிலுவையில் இருந்தால், உனக்கென்று சொந்தமாய் யாதொரு திட்டங்களும் உன்னிடத்தில் வைத்துக்கொள்ள முடியாது!" என அழுத்தமாய் கூறினார். உண்மைதான், சிலுவையில் இருக்கும் ஒருவனுக்கு அவன் போட்டிருந்த சொந்த திட்டங்கள் ஒழிந்து விடும்!*

> **"கேளுங்கள்: இவ்வுலகிலேயே மிகச்சிறந்த அழகான வாக்கியம் ஒன்றே ஒன்றுதான்! அது, "நான் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன்!" எனக்கூறும் வாக்கியமாகும்.**

*இந்நிலையில் ஒருவன் நிஜமாய் ருசித்திடும் அனுபவம் யாதெனில், கிறிஸ்து அவனுக்கு சொந்தமாய் மாறுகிறார்! அவனது வாழ்வின் திட்டங்களை கிறிஸ்துவே செயல்படுத்துவார்! அவன் பின்னால் "சுயத்தின் மரணம்" கடந்துபோய் கொண்டே இருக்க.... பேரானந்தமான மகிழ்ச்சியும், பரிபூரண ஜீவனும், அவனுக்கு முன் சென்று அவனை நடத்திக்கொண்டே செல்லும்!*

*இந்த பின்மாற்றமான நாட்களில், இயேசு போதித்த ஆதி முதல் ஆரம்பித்த* **சிலுவையை** *முடிவுவரை தழுவிக் கொள்ளுங்கள்! உத்தம சீஷர்கள், அன்றும் இன்றும் மனதார தழுவி ஏற்றுக்கொண்டது, இயேசு முன்வைத்த இந்த பூர்வீக சிலுவையே ஆகும். ஆகவே, இன்று ஆதி நிலை சிலுவையை மறந்து,* **'சுயத்தை' மேன்மைப்படுத்தும் மாறுபாடுகளை** *உதறித் தள்ளுங்கள்! பழமை வாய்ந்த சிலுவை ஒன்றே, உங்கள் சுயத்தின் வலிமையை வெளியரங்கமாக்கும்! இன்று தாண்டவமாடும் 'மறந்துபோன ஆதி சிலுவை' சுயத்திற்கு களிப்பூட்டும்! ஆதிமுதலான சிலுவையோ, மாம்சத்திற்கு ஆக்கினை கொண்டுவரும்! சிலுவை மறந்த போதகங்கள், உங்கள் மாம்சத்திற்கு கிலுகிலுப்பான இன்பம் தரும்! 'சிலுவை மறவாத' ஆதிநிலை, மாம்சத்தின் திட நம்பிக்கையை உருக்குலைய செய்திடும்! தன் இச்சைப்படியான 'சுய வழி' மாம்சத்தின் மீது கொண்ட சுய நம்பிக்கைக்கே ஊக்கம் தரும்! எந்த சிலுவை வேண்டும்? ஆதியிலிருந்த, இயேசு முன்வைத்த, பழமையான, மக்களிடமிருந்து மறக்கடிக்கப்பட்ட சிலுவை மாத்திரமே வேண்டும்! ஒப்பற்ற இந்த மேன்மையான சிலுவையே, உங்கள் பங்காய் இருந்திட தேவன் அருள் புரிவாராக! ஆமென்.*

*- A.W.டோசர்*

## ‘கிறிஸ்துவின் அன்பினால்’ ஜனங்களை ஈர்த்த சாதுசுந்தர்சிங்!

*தெய்வ அன்பிற்கு ‘தீண்டாமை’ தடையாய் இருப்பதில்லை*

**சா**து சுந்தர்சிங், இமாச்சல் பிரதேசத்தில் உள்ள ‘தீண்டாமை தீமை நிறைந்த’ கோட்கர் கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களையும், பள்ளி மாணவ வாலிபர்களையும் சந்தித்து ஊழியம் செய்தார். எந்த ஒரு பாகுபாடும் காட்டாமல், அனைவரையும் அன்புகூர்ந்து பேசிய ‘இயேசுவின் சுவிசேஷம்’ அந்த கிராமத்து மக்களை கவர்ந்து, அவர்களை கிறிஸ்துவண்டை சேர்த்தது! பின்பு, அவ்விடம் விட்டுச் சென்ற *சாது சுந்தர்சிங்,* சில மாதங்கள் கழித்து, மீண்டும் அதே கோட்கர் கிராமம் வந்து, ஊருக்கு அருகில் அவர் முன்பு தங்கியிருந்த ஓர் சிறிய குகை வீட்டில் அமர்ந்திருந்தார்!

இந்த செய்தி கேள்விப்பட்ட ‘ஜனங்கள்’ ஆனந்த கூத்தாடி, கண்ணீர் வடித்தார்கள்! *சாது சுந்தர்சிங்* தங்கி இருந்த குகையை நோக்கி ஓடி வந்தவர்களில், கால் நொண்டி நொண்டி நடந்து சென்ற பெண் பிள்ளைகளும், பரட்டை தலையோடு மகிழ்ச்சியுடன் ஓடிய பையன்களும், கூட்டமாய் சென்ற குஷ்டரோகிகளும் அடங்குவர்! தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் ஆனந்தமாய் அவரைத் தேடி ஓடினார்கள். **“எங்களுக்காக அல்லவோ சாது திரும்பி விட்டார்”** என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு, ஏதோ நித்திய பேரின்பம் கண்டதுபோல் அவரிடம் ஓடினார்கள்!

> “
> **விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள்** *சாது சுந்தர்சிங்* **அவர்களை முதலாவதாக சந்தித்த காலத்தில், அங்கிருந்த அனைவருமே மனம் திரும்பி இரட்சகரின் ஒளியை கண்டடைந்தார்கள்! அவர் சந்தித்த சிறு பிள்ளைகள் எத்தனை பேரோ, அத்தனை பேர்களுடைய இருதயத்திலும் இயேசுவின் ஜீவனை** *சாதுசுந்தர்சிங்* **விதைத்தார்.**

அந்நாட்களில், *சாது* அவர்களுக்கு C.F.ஆண்ட்ரூஸ் என்ற நெருங்கிய நண்பர் இருந்தார். அவர் சாது சுந்தர்சிங்கைப் பற்றி கூறும்போது: *“சுந்தர்சிங் இமாச்சல் பட்டணத்தில் இருக்கும்போது, தன்னுடைய உபரி நேரத்தை பள்ளி வாலிப பையன்களோடு அதிகமாய் செலவழித்தார். இரவில் நீண்ட நேரமாய் இந்த வாலிப பையன்கள் கோட்கரில் அவர் தங்கி இருந்த குகைக்கு முன்பாக அமர்ந்து, சாது சுந்தர்சிங்கின் பிரகாசிக்கும் முகத்தை கண் இமைக்காமல் உற்று நோக்கி, அவர் கூறுவதை பேரார்வத்துடன் கேட்பார்கள். அவருக்குள் இருந்த விசுவாச தைரியமும், துணிச்சலும் இந்த இளைஞர்களின்*

*உள்ளத்தை கொள்ளை கொண்டது!" எனக் கூறினார்.*

இந்த மாணவ இளைஞர்களிடம் ஏற்பட்ட மாறுதல் மிக ஆச்சரியமானது! ஒரு சமயம் இந்திய புகழுக்கு விளையாட்டு வீரனாய் திகழ்ந்த 'கோட்கரை' சார்ந்த ஒரு மாணவன், IAS இந்திய அரசாங்க பணி தனக்கு கிடைத்த போதும், அதை உதறிவிட்டு, கிறிஸ்துவுக்கு தொண்டாற்ற முன் வந்தார். மிகப் பெரும் திறமை கொண்ட மற்றொரு மாணவன், சபையின் ஊழியத்திற்கு தன் ஜீவனை தியாக பலியாக ஒப்படைத்து, கிறிஸ்துவின் மீதுகொண்ட தனது அன்பை வெளிப்படுத்தினார்!

*இமாச்சல் பிரதேசத்தில் 'தீண்டாமை' தலை விரித்து ஆடிய கொடிய காலம்! ஒரு உயர்நிலை பள்ளியில் தீண்டத்தகாத, துப்புரவு பணியாற்றிய ஒரு தோட்டி, கொடிய விஷக் காய்ச்சலால் தன் சேரியில் மரண தருவாயில் அவஸ்தைப்பட்டார். சாது அவர்களின் அன்பின்* ***சீஷனாய் விளங்கிய*** *ஒரு மாணவ இளைஞன், உயர் வகுப்பை சேர்ந்த அவன், தீண்டத்தகாத தோட்டியின் குடியிருப்புக்குச் சென்று, சுகவீனமாய் கிடந்த தன் பள்ளியின் தோட்டிக்கு, அனைத்து உதவிகளையும் செய்து, அவருடைய அந்த சேரியில் தங்கி, நல்ல சுகத்துடன் அந்த தோட்டி பள்ளிக்கு திரும்பி வரச் செய்தான்! இதுபோன்ற செயல், இமாச்சல உயர்குல மக்களிடையில் அந்நாட்களில் சம்பவித்ததை, ஒரு மாபெரும் அற்புதம் என்றே சொல்ல வேண்டும்!*

இமாலய மலையில், கொடிய வயிற்று வலியில் சுருண்டு சாகக் கிடந்த ஒரு 'தீண்டத்தகாத' மனுஷனை, *சாதுவோடு* அமர்ந்து உபதேசம் கேட்ட ஒரு பையன், அவரைத் தன் முதுகில் போட்டுக்கொண்டு சுமார் 2 மைல் அந்த மலையின் கரடுமுரடான பாதையில் நடந்துவந்து, அவர் உயிரை காப்பாற்றினான். தொற்று நோயில், அழுகி இருந்த அந்த மனிதனை உயர்குல வாலிபன் தூக்கிவந்த செயலுக்கு 'ஒரே காரணம்' *சாது* அவர்களோடு சேர்ந்து அவன் பெற்றுக்கொண்ட **இயேசுவின் தியாக ஆவியே** ஆகும். அவன் தூக்கி வந்த செயலைவிட, **அவனிடமிருந்து ஒளி வீசிய அன்பின் சுடரே** அன்று எல்லோர் மனதையும் பரவசப்படுத்தியது!

சாதுவை சூழ்ந்திருந்த மக்களில், 'குறிப்பாய்' வாலிபர்களின் உள்ளத்தை மாற்றிய மகிமை, சொல்லி முடியாதது!

**" ஒரு மனுஷீகமான ஆறுதல், ஒரு மனுஷீகமான தியாகம், ஒரு மனுஷீகமான அன்பு.... ஆகிய யாதொன்றும், ஒரு மனிதனை இந்த அளவிற்கு மாற்ற இயலாது! அதுபோன்ற அரை - குறை தியாக**

புருஷர்களைக் கண்ட இந்த வாலிபர்களின் உள்ளங்கள் ஆழமாய் கவரப்பட்டதில்லை! ஆனால் சாது சுந்தர்சிங்கின் வாழ்க்கையோ முற்றிலும் அனல் கொண்ட தியாகச் சுடராய் இருந்தது. அவர் தனக்காக வாழ்ந்தார் எனச் சொல்வதற்கு, துருவி துருவி பார்த்தாலும், யாதொரு தடயமும், யாதொருவராலும் காண முடியவில்லை!

*அவர் மனப்பூர்வமாய் உவந்தளித்த "செல்லும் செலவை" இயேசு கிறிஸ்துவின் தியாகத்தோடு மாத்திரமே ஒப்பிட முடியும். அவர் ஜீவித்த காலம் வரை, ஜனங்களிடத்தில் 'சிலுவையை' வானளாவப் புகழ்ந்து பிரசங்கித்தார். இருப்பினும், அதுவல்ல அவரது வாழ்வின் இரகசியம்! அதைவிட மேலாய் "**அவர் சிலுவையை தழுவி வாழ்ந்தார்!**" என்பதே அவரைக் குறித்த இரகசியமாய் இருக்கிறது! இவ்வழி செல்லும் வாலிப உள்ளங்கள், இன்று நம்மிடத்தில் உண்டோ? இதுவே உங்களைச் சந்திக்கும் மிகப்பெரிய கேள்விக்குறி.... பதில் உங்களுடையதாய் இருக்கட்டும்! ஆமென்.*

*- சாது சுந்தர்சிங்*

---

## 'கிறிஸ்து கட்டும் சபை' என்றும் நிலைத்திருக்கும்!

*பாதாளம் மேற்கொள்ளாத சபை*

*இயேசு கட்டும் சபை, மகா உறுதியானது! பாதாளத்தின் வாசல்கள் 'அந்த சபையை' மேற்கொள்வதில்லை! என இயேசு அறிவித்தார் (மத்.16:18). அன்று, சபையை கட்டும் ஊழியத்திற்குரிய "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை" அல்லது அதன் அதிகாரத்தை பேதுருவுக்கு வழங்கினார்! (வசனம் 19). இதுவே, ஒரு சபையும், அவரது சீஷனாய் விளங்கும் ஊழியனும் பெற்றிருக்க வேண்டிய பரத்தின் அதிகாரம்! விலையேறப்பெற்ற இந்த அதிகாரத்தை, பரிசுத்தாவியின் வல்லமையோடு, இயேசு தன் சீஷர்களுக்கு வழங்கிய பிரதான நோக்கம்: தன் ஊழியர்கள் புறப்பட்டு "சகல பிசாசுகளைத் துரத்தவும்! வியாதியுள்ளவர்களை குணமாக்கவும்! தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கிக்கவும்!" அவர்களை அவர் அனுப்பினார் (லூக்கா 9:1,2).*

*<u>அவர் அதிகாரம் அளித்து அனுப்பிய சீஷர்களின் ஊழிய தகுதி:</u>*

***அது** பிரதானமாய் "....அவர்கள் வழிப்பசிக்கு **அப்பத்தையாவது,** தங்கள் செலவுக்கு **காசையாவது,** எடுத்துக்கொண்டு போக வேண்டாம்!" என்று கூறி அனுப்பினார் என்பதுதான்! (லூக்.9:3). பொருள் என்னவெனில் "தேவ ராஜ்யத்தை பிரசங்கிப்பதும், சகல பிசாசுகளின் மீதும் அதிகாரமெடுத்து துரத்தவும், சகல*

*பிணியாளிகளை சொஸ்தமாக்குவதுமாகிய நோக்கம் ஒன்றே உங்களுக்கு பிரதானமாயிருக்கக்கடவது!" என்றே கட்டளையிட்டு அனுப்பினார்! அவருடைய உத்தம சீஷர்கள், அவரது கட்டளையை நன்றாய் விளங்கிக்கொண்டு 'கர்த்தரை மாத்திரமே நம்பி'* **"புறப்பட்டுச் சென்றார்கள்!"** *அவ்வாறு போன இடங்களிலெல்லாம் "சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளை குணமாக்கி, பிசாசுகளையும் துரத்தினார்கள்"(லூக்கா.9:6;10:17-19). இவ்வாறு, அவர்கள் மூலமாய் "தேவனுடைய ராஜ்ஜியம்" பலமாய் கட்டப்பட்டது! இயேசுவால் அனுப்பப்பட்ட இந்த சீஷர்களின் காலின் கீழ் சாத்தான் மிதிக்கப்பட்டான்! (லூக்கா 10:9,11,18,19).*

**"உண்மைதான்! இயேசுவின் சீஷர்களிடம் "தியாகமும், அர்ப்பணமும்" காணப்படுவதே, கிறிஸ்து தன் சபையைக் கட்டும் பணிக்கு பிரதான அவசியமாயிருக்கிறது! 'தங்களுக்கான யாதொன்றையும் தேடாத' அவர்களின் தியாகமான அர்ப்பண ஜீவியமே, சபையை விரோதித்து எதிர்த்திடும் சாத்தானை ஜெயித்திடும் இரகசியமாயிருக்கிறது! அதனிமித்தமாகவே, சபையின் காலின் கீழ் "சாத்தான் மிதிக்கப்படுவான்! பாதாளத்தின் வாசலும், சபையை மேற்கொள்வதில்லை!" என்ற வலிய செயல் நிறைவேறுகிறது!**

*சபையை வீழ்ச்சியடையச் செய்திடும் தந்திரமோ "தியாகமான அர்ப்பணஜீவியத்திற்கு" முற்றிலும் மாறுபட்ட செயலாய் பிசாசுகிரியை செய்கிறான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே மேற்கொண்டு ஜெயித்திட, தன் தந்திரத்தை செயல்படுத்த முயற்சித்தான்! இயேசு சீஷர்களுக்கு வழங்கிய பரம அதிகாரத்தை 'துச்சமென' புறக்கணித்து* **'அவன் வழங்கும் அதிகாரத்தை'** *மிக கவர்ச்சியாய் காண்பித்தான்! உலக ராஜ்ஜியங்களையும், அதன் மகிமையையும் காண்பித்து, தன்னை தாழ பணிந்து கொண்டால், அவர்களுக்கு "இந்த கவர்ச்சியான அதிகாரத்தை" தருவேன்! என்ற, அவனது அறிவிப்பேயாகும்! (லூக்கா 4:4-7). இயேசுவோ "தேவனாகிய கர்த்தர் ஒருவரையே நான் ஆராதிப்பேன்!" எனக் கூறி, "அப்பாலே போ, சாத்தானே" என்று அவன் வழங்கிய 'உலக மகிமையின் அதிகாரத்தை' புறக்கணித்து கொர்ஜித்தார்! இவ்வாறாக, "***தியாகமும் அர்ப்பணமும்*** *"* **ஆதாரமாய் கொண்ட கிறிஸ்துவின் சபையை,** *எந்த சத்துவமும் மேற்கொண்டிட கிறிஸ்து அனுமதிக்கவில்லை! அன்றும், இன்றும், என்றென்றும் "கிறிஸ்துவின் சபையை" பாதாளத்தின் வாசல் மேற்கொள்வதில்லை என்பதே, கிறிஸ்து கட்டும் சபையின் நிலைத்திருக்கும் ஜெயம்!*

*- T.ரத்தினகுமார்*



## 'கிறிஸ்துவின் தாழ்மை' உயர்த்திய பரிசுத்தர்

# ஜெரேமி டெய்லர்

இங்கிலாந்து தேசத்தின், கேம்பிரிட்ஜ் பட்டணத்தில் பிறந்தவர் 'ஜெரேமி டெய்லர்' (Jeremy Taylor). தன்னுடைய பட்டணத்தின் கலாச்சாலையில் சிறந்த படிப்பை முடித்து, பல்கலைகழகத்தின் ஆலய பொறுப்பும் ஏற்றார். அவர் வாழ்ந்த சந்ததி காலத்தில் சுய நலம் தலைவிரித்து நின்ற காலம். "இதை செய்வதால் எனக்கு என்ன லாபம்?" என கேட்கும் கிறிஸ்தவர்கள் மத்தியில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரம சற்குணத்தை உயர்த்தி காண்பித்திட 'தாழ்மையை' பிரதான பங்காய் ஜெரேமி டெய்லர் எடுத்துரைத்தார். அந்த நாட்களில், தனிப்பட்ட விதத்தில் ஜெரேமி டெய்லரை அறியாதவர்கள், அவர் எழுதிய 1)வாழ்வதும் பரிசுத்தமே 2) மரிப்பதும் பரிசுத்தமே ஆகிய 2-புத்தகங்களால் டெய்லர், இங்கிலாந்து தேசம் முழுவதும் அறியப்பட்டார். இந்த உலகில் நாம் கடந்து செல்லும் சம்பவங்கள், வீட்டு நிலைமைகள், வீட்டுக்கு வெளியே நமக்கு ஏற்படும் சம்பவங்கள், எதிர்கொள்ளும் பாவமான சூழ்நிலைகள் ஆகிய அனைத்திலும் நம் ஆத்துமா பாதுகாப்பாய் இருக்கும் ஒரே இடம் 'தாழ்மையின் பள்ளத்தாக்கு மட்டுமே' என எடுத்துரைத்தார்!

மேலும் அவர் வலியுறுத்தி பிரசங்கித்ததெல்லாம்: ஒரு தாழ்மையான மனிதன், தன் விருப்பத்திற்கு முதலிடம் தரமாட்டான்! தனக்குரிய பங்கை தேவனே தெரிந்து தரும்படி காத்திருப்பான்! தேவனுடைய கற்பனை யாதொன்றைக் குறித்தும் முறுமுறுக்க மாட்டான்! தனக்கு ஏற்படும் காயங்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்வான்! தன் எல்லா நடத்தையிலும் 'இன்னும் நன்றாய் செய்திருக்கலாமே' என்ற பணிந்த பண்புடையவனாய் இருப்பான்! பக்தியான மனுஷர்களை கண்டால், அவர்களை நேசித்து அண்டிக் கொள்வான்! ஒரு மனிதனைக்கூட கண்டனம் செய்யவோ அல்லது ஆக்கினைத்தீர்ப்போ செய்திட மாட்டான்! அவனுடைய பேச்சில் எப்போதும் பக்தியான ஒழுக்கம் நிறைந்திருக்கும்! தன்னுடைய சிரிப்பிலும் அடக்கமாய் இருப்பான்! தான் புகழப்படும்போது தெய்வ பயத்தோடு நடந்துகொள்வான்.... ஏனென்றால், அந்த புகழ்ச்சியில் தான் நடந்து கொள்ளும் விதத்தை கர்த்தர் வேறுவிதமாய் நியாயத்தில் நிறுத்துவார் என்பதை அறிந்திருப்பான்! தன் தவறுகளை சிந்தித்து சீர்ப்படுத்துவான்! தான் உயர்த்தப்படுவது அல்லது உயர்த்தப்படாமலிருப்பதைக் குறித்து அக்கறைப்பட மாட்டான்! பிறரால் மதிப்பு குறைவாக கருதப்படுவதை மகிழ்வுடன் தழுவிக் கொள்வான்..... அது ஏனெனில், ஒருவன் தன்னைத்தானே மதிப்பு குறைவாக வைத்துக்கொள்வது அவனுக்கே கூடாத காரியம் என அறிவான்! ஆகவே மகிழ்வுடன் சகித்து வாழ்வான்!

மேற்கூறிய அனைத்தும், நமக்காக இந்த உலகத்தில் வந்த இரட்சக பெருமான் பிரகாசித்த எளிய, ஏழ்மையான, அடிமையின் ரூபத்தில் பிரகாசித்த தெய்வ பண்புகள் என்பதை ஜெரேமி டெய்லர் வலியுறுத்தி எழுதினார், பேசினார், வாழ்ந்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, அழிவிலிருந்து 'ஜீவனுக்கு' மீண்டு வாருங்கள்!

வேதாகமத்தில் லேகியோனைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். பிசாசானவன் அவனை பிரேத கல்லறைகளுக்கும், வனாந்திரங்களுக்கும் துரத்திவிட்டிருந்ததாக வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன (லூக்கா 8:27,29). எத்தனை கொடூரம் பாருங்கள். வீட்டைவிட்டு லேகியோனை துரத்திய சாத்தான், அத்தோடு நின்றுவிடாமல், குடும்பத்தின் உறவுகள், பாசப் பிணைப்புகள், அன்பின் கட்டுகள் யாவையும் விட்டுப் பிரித்தெடுத்து ஊளையிடுதலுள்ள அவாந்தரமான வனாந்திர வெளிகளுக்கும், நாற்றமும், துர்க்கந்தமும் வீசும் கல்லறை குழிகளுக்கும் அவனை விரட்டி விட்டிருந்தான்!

'பாலஸ்தீனா தேசம்' திராட்சத் தோட்டங்கள், அத்தி மரங்கள், ஒலிவத்தோப்புகள் நிறைந்த தேசம். பிசாசானவன், லேகியோனை திராட்சத் தோட்டங்களுக்குள் விரட்டிவிட்டிருக்கலாமே! பசிக்கும் நேரம் திராட்சை கனிகளைப் பறித்துப்புசித்து, வெயில் எரிக்கும் நேரம் திராட்ச செடிகளின் நிழலில் லேகியோன், சுகமாக படுத்துக்கொள்வானே! ஆனால், பிசாசு பஞ்சமாபாதகன், கருணையற்ற கல்நெஞ்சினன்! அவனை, பசி பட்டினி போட்டு வதைத்து, பகலின் வெயிலையும், இரவின் பனியையும், அவன் மேல் பெய்யச் செய்து, அவனை சாகடிப்பதுதானே பிசாசின் நோக்கம்!

தினந்தோறும் சாலைவிபத்துக்களின் மூலமாக, எத்தனை லட்சாதி லட்சம் மக்களை சாத்தான் வாரிக்கொண்டிருக்கிறான்! வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு மதுபானத்தை நாசி வரை குடிக்கக்கொடுத்து, அவர்கள் கரத்தின் சுக்கானை சாத்தானே தனது கரத்தில் பிடித்து ஓட்டி, வாகனங்களை மோதி உடைத்து நொறுக்கி, நொடிப்பொழுதில் ஏராளமான மக்களின் உயிர்களை தினமும் குடித்து வருகின்றான்! தேவன் தாமே அவனது கொடிய வல்லடிகளுக்கு கர்த்தருடைய சொந்த பிள்ளைகளாகிய நம்மை விலக்கி காத்து, அவனது சதி ஆலோசனைகளில் நாம் விழுந்துவிடாதபடி நம்மை பாதுகாத்து நடத்துகின்றார்! இந்த மகத்துவ இரட்சக பெருமானை புறக்கணித்திடாமல், அவரிடம் மனந்திரும்பி அண்டிவந்து, பாவ மன்னிப்பின் புண்ணியம் பெறுங்கள்! பாவியாகிய நீங்கள் இரட்சிப்படையுங்கள்! ஜீவனை கண்டடையுங்கள்! அழிவிலிருந்து காக்கப்படுங்கள்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship
@indianbk